# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 14.05.2026**

**முன்னிலை**

**திரு. அபய் குமார் சிங் இ.கா.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10697/F/2024**

திருமதி.கிறிஸ்டினா ராஜபிரியா -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத்தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர், -- பொது அதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்,
சூளகிரி வட்டம்,
கிருஷ்ணகிரி - 635 117.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 14.05.2026 முற்பகல் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திருமதி.கிறிஸ்டினா ராஜபிரியா ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு.கோ.கோகுலகண்ணன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 11.04.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள ***"கிருஷ்ணகிரி ஓசூர் நெடுஞ்சாலையில் சுண்டகிரி என்ற இடத்தில் சரவணா பவன் மற்றும் ஜூனியர் குப்பண்ணா ஆகிய ஓட்டல்கள் இரண்டும் எந்த திசையில் அமைந்துள்ளது என்பதை சான்றிடப்பட்டு வழங்கவும்"*** தொடர்பாக 11 இனங்களில் பொதுத்தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூளுகிரி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் ந.க.774/2024/அ3, 21.05.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், பொதுத் தகவல் அலுவலர் அவர்களிடமிருந்து முழுமையான தகவல்கள் பெறப்படவில்லை என மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(1)-ன் கீழ 15.05.2024 தேதியிட்ட தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

4. அம்மனுவை பெற்ற முதல் மேல்முறையீட்டு அலுவலர் அவர்களிடமிருந்து தகவல்கள் கிடைக்கப்பெறாததால் மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(3)-ன் கீழ் 16.08.2024 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 14.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தனக்கு முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்தை கேட்டுக் கொண்டார். மேலும் பொதுத் தகவல் அலுவலர் 11.04.2024 அவர்கள் தேதியிட்ட மனுவிற்கு மீண்டும் ந.க.774/2024/அ3, 01.12.2025 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். ***பொது அதிகார அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள தகவல்களை பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானதாக இல்லை என ஆணையம் கருதுகிறது.*** எனவே ஆணையம் பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு இறுதி வாய்ப்பு வழங்கி கீழ்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது:-

- **மனுதாரர் 11.04.2024 தேதியிட்டு சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியபடி *முழுமையான* தகவல்களை உரிய துறை அலுவலரிடமிருந்து பெற்று *தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள்* ஆகியவற்றினை இவ்வாணையத்தில் 19.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- ***மேலும், மனுதாரரின் 15.05.2024 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 19(1)ன்கீழ் உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலர் அலுவலகம், சூளகிரி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை பெற்று 19.06.2026 அன்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA 10697/F/2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1. **பொதுத் தகவல் அலுவலர் /**
   தலையிடத்து துணை வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   சூளகிரி வட்டம்,
   கிருஷ்ணகிரி - 635 117.
2. **அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்,**
   தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
   **(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

**மனுதாரர்**

திருமதி.கிறிஸ்டினா ராஜபிரியா,
க.எண்.34, டாக்டர் அம்பேத்கர் தெரு,
அரும்பாக்கம்,
சென்னை - 600 106.

**நகல்**

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 35 (For follow up)

Copy to file: RVPA
21.05.2026